# எரிவாயு தட்டுப்பாட்டினால் பொது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் பிரதியீட்டுத் தீர்வுகளும்: கெலிஓயா பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

M. A. F. Ashfa[1], M. N. F. Akeela[2], M. N. Aysha[3], A. Ijas Mohamed[4] & S.M.M. Mazahir[5]

[1,2,3, &5] *Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka*

[4] *Department of Arabic Language, South Eastern University of Sri Lanka*

ashfaansar6@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

இன்றைய நவீன மனிதன் அவனது அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்ய இலகுவான வழிமுறைகளைப் பயன்படுத்தி வருகிறான். ஆரம்பகால மனிதன் தமது வீட்டு எரிபொருள் தேவைக்காக விறகுகளையே பயன்படுத்தி வந்தான். எனினும் காலப்போக்கில் வீட்டு எரிபொருள் தேவைக்காக எரிவாயு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அவ்வாறே அதன் பயன்பாடு அதிகரித்து எரிவாயு இல்லாமல் வீட்டு எரிபொருள் தேவையை நிறைவு செய்ய முடியாது என்ற நிலைக்கு மனிதன் தள்ளப்பட்டுள்ளான். எரிவாயுக்கான கேள்வி அதிகரித்த காரணத்தினால் எரிவாயு தட்டுப்பாடு பல நாடுகளில் ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள எரிவாயு தட்டுப்பாட்டினால் மக்கள் எவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்பதைக் கண்டறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்விற்காக எழுமாற்று மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்ட கண்டி மாவட்ட கெலிஓயா பிரதேசத்தைச் சேர்ந்த 167 குடும்பங்களுக்கு வினாக்கொத்து வழங்கப்பட்டது. பூரணப்படுத்தப்பட்ட வினாக்கொத்து மூலமும் கலந்துரையாடல், அவதானம் மூலமும் முதலாம் நிலைத் தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளாக ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையக் கட்டுரைகள் என்பன மூலமாக தகவல் சேகரிக்கப்பட்டு அத்தரவுகள் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டன. இவ்வாய்வின் கண்டறிதல்களாக கெலிஓயா பிரதேசத்தில் அனேகமானோர் எரிவாயுவைப் பயன்படுத்துவதாகவும் இதில் அதிகமானோர் எரிவாயு தட்டுப்பாட்டினால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளமையும் ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது. அவற்றில், சமையல் எரிவாயுவின் விலை அதிகரித்ததால் அதனைக் கொள்வனவு செய்வதில் உள்ள சிரமம், சமையல் எரிவாயுவின் கொள்ளளவு குறைக்கப்பட்டதால் அதன் பாவனைக் காலம் குறைந்ததில் உருவான சிரமம், மக்கள் அன்றாடம் உணவுகள் சமைக்க முடியாது அவற்றினை கடைகளிலும் ஹோட்டல்களிலும் பெற்றுக்கொண்டதால் இடர்பாடுகளை சந்தித்தமை, ஆரோக்கியமான உணவைப் பெறுவதில் சிக்கல்கள் ஏற்பட்டதால் நோய்வாய்ப்படல், கூட்டுக்குடும்பத்தில் வாழ்வோர், தினக்கூலி செய்வோர், சிறிய குழந்தைகளை வைத்துக்கொண்டிருக்கும் தாய்மார்கள், உணவகங்கள் மற்றும் வெதுப்பகங்களில் பணியாற்றக் கூடிய ஊழியர்கள் போன்றோர் இவற்றிலும் வேறுவிதமான பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்தல் போன்றன முக்கியமானவையாகும். இருப்பினும், எரிவாயு தட்டுப்பாட்டால் சில மாற்று வழிகளைக் கையாண்டாலும் சமையலை உரிய நேரத்தில் நிறைவேற்ற முடியாமை, புகையினால் ஏற்பட்ட ஒவ்வாமை மேலும், மின் அடுப்புப் பாவனையால் மின்கட்டணம் அதிகரித்தல் போன்ற பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்துள்ளனர் என்பதையும் இவ்வாய்வின் முடிவாக கண்டறியப்பட்டுள்ளது. மேலும், ஆய்வின் பரிந்துரைகளாக இப்பிரச்சினையை தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தல், மக்கள் இவ்வகையான அசாதாரண சூழ்நிலைகளை

எதிர்கொள்ள தயார் ஆகுதல், எரிபொருள் பாவனையை குறைக்க மாற்று வழிகளை பின்பற்றுதல் என்பன முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** இலங்கை, எரிவாயுத் தட்டுப்பாடு. கெலிஓயா பிரதேசம், பிரச்சினைகள், தீர்வுகள்


**ஆய்வு அறிமுகம்**

இருபத்தோராம் நுற்றாண்டில் வீற்றிருக்கும் நாம் பல்வேறு முன்னேற்றங்களை அடைந்துள்ளோம். விஞ்ஞான, தொழிநுட்பத்தின் அபரிமிதமான வளர்ச்சியினால் மனிதன் பல சாதனைகளை படைத்து வருகிறான். அந்த வகையில் மனிதன் தன் தேவைகளை நிவர்த்தி செய்யப் புதிய வழிமுறைகளைக் கையாண்டு வருகின்றான். அவற்றுள் முக்கியமான ஒன்றாக எரிபொருள் பயன்பாட்டைக் குறிக்கலாம். இது உலக அளவில் பாரிய செல்வாக்குச் செலுத்துகின்ற விடயமாகும்.

எரிபொருட்களுள் பல வகைகள் காணப்படுகின்றன. அவற்றுள் பெற்றோலியம், நிலக்கரி வாயு, நீர் மின்வலு, சூரியசக்தி, அணு சக்தி, காற்று சக்தி மற்றும் புவி வெப்ப சக்தி முதலியன முக்கியமானவை. இன்று முக்கியமான எரிபொருளாக நிலக்கரி, பெற்றோலியம் திகழ்கிறது. உலகில் இவற்றின் மிகையான நுகர்வு தற்காலத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. திரவ பெற்றோலிய வாயு நிறைந்த சல்பர் உள்ளடக்கம் கொண்ட உலகின் கிட்டத்தட்ட மூன்று மில்லியன் மக்களால் பயன்படுத்தப்படும் ஓர் அருமையான சமையல் எரிபொருள் ஆகும் (Wijesekara, 2019).

வளர்ந்து வருகின்ற இலங்கை போன்ற நாடுகளில் திரவ பெற்றோலிய வாயுவின் பயன்பாடு வரவேற்கத்தக்கதாகும். மக்களது அடிப்படை தேவைக்காகவும் தொழில்துறைகளுக்கும் உள்நாட்டு நோக்கங்களுக்காகவும் இவ் எரிபொருள் விருப்பமான ஒன்றாக புகழ்பெற்று வருகின்றது. இதற்கு இவற்றின் நம்பகத் தன்மை, செயல்திறன் என்பவை காரணமாகும். அந்த வகையில் இலங்கை எல் பி ஜியின் வருடாந்த 2018 நிலவரப்படி மொத்தம் 441.341 அவ வரை காணப்படுகின்றது. இவை வீடுகளிலும் உணவகங்களிலும் ஆயுதப் படைகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன (Wijesekara, 2019).

அந்த வகையில், 1980 – 2012 வரையான காலப்பகுதியில் இலங்கையில் காணப்படுகின்றன. அதாவது 1986 காலப்பகுதியில் ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் 0.05 ஆயிரம் சிலிண்டர்களாகவும் சராசரியாக ஒரு நாளைக்கு 3.1 ஆயிரம் சிலிண்டர்களாகவும் மதிப்பீடு செய்யப்பட்டது. காலம் செல்லச் செல்ல அதன் தேவையும் பாவனையும் அதிகரித்துக் கொண்டே சென்றன.




படம் 01 இலங்கையில் சமையல் எரிவாயு பாவனையாளர்களின் தரவு (2005-2012)

Source - (*Sri Lanka: LPG consumption, n.d).*

இத்தரவைப் பொறுத்தவரை 2008 மற்றும் 2009 காலப்பகுதியில் சமையல் எரிவாயு பாவனையாளர்கள் சிறிய வீழ்ச்சியைக் கண்டதோடு ஏனைய காலங்களில் தீவிரமாக வளர்ச்சி கண்டது. இவ்வளர்ச்சிக்கு நகரமயமாக்கம் இளகுவாக சமையல் எரிவாயுவை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு போன்ற பல்வேறு காரணங்களினால் சமையல் எரிவாயுவின் பயன்பாடு வெகுவாக அதிகரித்தது.

கோவிட்-19 மற்றும் வேறு காரணங்களினால் இவ்வுலகு தற்போது எதிர்நோக்குகின்ற பொருளாதார நெருக்கடியால் மனிதன் பல்வேறு இன்னல்களுக்கு உட்படுத்தப்படுகிறான். இவற்றில் ஒன்றுதான் அண்மைக்காலமாக எதிர்நோக்குகின்ற எரிவாயு தட்டுப்பாடு. இதனால் மக்கள் எவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்? அதற்கான தீர்வு அல்லது மாற்றீடு என்ன? என்பதனை ஆய்வு ரீதியாக முன்வைக்க இவ்வாய்வு முனைகின்றது.

## ஆய்வு பிரச்சினை

இன்றைய காலப்பகுதியில் அதிகமானோர் தமது வீட்டு எரிபொருள் தேவைக்காக வேண்டி எரிவாயுவைப் (LPG) பயன்படுத்துகின்றனர். பயன்பாடு அதிகரிக்கும் போது அதற்கான கேள்வியும் அதிகரித்துச் செல்வது இயல்பானது. அதிகமானோர் தமது எரிபொருள் தேவையில் எரிவாயுவை மாத்திரமே நம்பியுள்ளனர். அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள எரிவாயுவின் தட்டுப்பாடு காரணமாக பொதுமக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த வகையில் கெலிஓயா பகுதியைச் சேர்ந்த பொது மக்கள் எவ்வாறான பிரச்சினைகளை எதிர் கொள்கிறார்கள் என்பதனை ஆய்வுப் பிரச்சினையாக் கொள்ளப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.


## ஆய்வு நோக்கம்

1. கண்டி கெலிஓயா பிரதேச மக்கள் சமையல் எரிவாயுத் தட்டுப்பாட்டால் சிரமத்தை எதிர்கொள்கின்றனரா எனக் கண்டறிதல்.

2. அப்பிரதேச மக்கள் எரிவாயுத் தட்டுப்பாட்டால் எவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தார்கள் எனக் கண்டறிதல்.
3. சமையல் எரிவாயுத் தட்டுப்பாட்டினால் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல்.

**ஆய்வுப் பிரதேசம்**

மத்திய மாகாணத்தில் கண்டியில் அமைந்திருக்கும் ஒரு சிறிய பகுதியே கெலிஓயா பிரதேசமாகும். 0.457மஅ$^2$ பரப்பளவு கொண்ட இப்பகுதியில் 1,476 (Gelioya central…..,2020) மக்கள் வாழ்கின்றனர். கண்டி மாவட்டத்தில் உடுநுவர பிரதேசத்தில் காணப்படும் 124 கிராம சேவகர் பிரிவுகளில் ஒரு கிராம சேவகர் பிரிவை மையப்படுத்திய பிரதேசமே இந்த கெலிஓயா பகுதியாகும்.




**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வில் விபரிப்பு ஆய்வு முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளது. முதலாம் நிலைத் தரவுகள் வினாக்கொத்து, கலந்துரையாடல்கள், அவதானம் ஆகியவற்றின் மூலம் பெறப்பட்டன. வினாக்கொத்து எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட கண்டி கெலிஓயா பகுதியைச் சேர்ந்த 165 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டன. இரண்டாம்நிலைத் தரவுகள் ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணைய கட்டுரைகள் போன்றவற்றில் இருந்து பெறப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகள் MS - excel மூலம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு, முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

எரிவாயு தட்டுப்பாடு சம்பந்தமாகவும் அதனால் உருவான பிரச்சினைகள் தொடர்பாகவும் கண்டிப் பிரதேசத்தை மையப்படுத்தி ஆய்வுகள் எதுவும் கண்டறியப்படவில்லை. அதிலும் இலங்கை தவிர்த்து வேறு சில நாடுகளை மையப்படுத்தி எரிவாயு தட்டுப்பாடு, எரிவாயு பயன்பாடு மற்றும் எரிவாயுக்கான கேள்வி, எரிவாயுவினால் ஏற்படும் உடல், காலநிலை மாற்றங்கள் போன்ற பல்வேறுபட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1. D. Asamoah, R. Amoakohene, E. Adiwokor vd;gtu;fshy; ஆய்வு செய்யப்பட்ட, International Journal of Business Administration 2012இல் வெளியிட்ட, “Analysis Liquated Pctrokum (LPG) Shortage in Ghana: A Case of the Ashanti Region” எனும் ஆய்வில், கானா நாட்டில் எரிவாயு வழங்குவதில் காணப்படுகின்ற குறைபாடுகள் தொடர்பான விடயங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

2. E. B. Bediako, O. K. Dankwa என்போரால் ஆய்வு செய்யப்பட்டு International Journal of Scientific and Technology 2012,ல் வெளியிட்ட, “Assessment of Liquefied Petroleum Gas (LPG) Utilisation in Ghana: A Study A Trakwa” எனும் ஆய்வில், கானா நாட்டில் எரிவாயுவின் பயன்பாடு, எரிவாயுவை பெற்றுக்கொள்வதில் தொழில்நுட்ப, சேமிப்பு,

விநியோக ரீதியாக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் போன்றவைகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

3. UNEP 2009 இல் வெளியிட்ட, M. B. Smith, S. Umbadda, A. J. A. Fadul, H. Bagadi MfpNahuhy; ஆய்வு செய்யப்பட்ட, "Demand for Wood full and Liquefied Petroleum Gas (LPG)" எனும் ஆய்வில், சூடானின் தலைநகரப் பகுதியில் மக்களின் கேள்வி விறகு மற்றும் எரிவாயுவிற்கு எவ்வாறு காணப்படுகின்றது? எரிவாயுவை தெரிவு செய்வதில் என்ன காரணம் செல்வாக்குச் செலுத்துகின்றது? போன்றன ஆய்வு செய்யப்பட்டுள்ளன.
4. Eco HEALTH – (2018) இல், Mexwell Dalaba மற்றும் அவரது குழுவினராலும் ஆய்வு செய்யப்பட்ட, "Liquefied Petroleum Gas (LPG) Supply and Demand for Cooking in Northern Ghana" எனும், ஆய்வில், கானாவின் வடக்குப் பகுதியில் உள்ள அதிகமானோர் எரிவாயு (டூபு) பயன்படுத்துவதோடு தெற்கு பகுதியில் அதன் பாவனை குறைவாக உள்ளது. அங்கு எரிபொருளுக்கான எவ்வாறான சந்தை வாய்ப்பு, மக்கள் இதனை பெற்றுக் கொள்வதில் உள்ள வாய்ப்புக்கள் மற்றும் தடைகள் ஆராயப்பட்டுள்ளன.
5. Walden Dissertations and Doctoral Studies collection at schoolwork's எனும் வெளியீட்டகத்தில் ளுயாநநன டுயளளைை என்பவரால் 2021 இல் வெளியிடப்பட்ட, "An Analysis of Liquefied Petroleum Gas Adoption for Household Cooking in Nigeria" எனும் ஆய்வில், பாரம்பரிய எரிபொருள் முறைகளால் பல்வேறு தாக்கங்கள் ஏற்படும் என்ற வகையில் எரிவாயுவின் பயன்பாடு நைஜீரிய நாட்டில் எவ்வாறு உள்ளது. இது தொடர்பாக மக்கள் என்ன விடயங்களை அறிந்து வைத்துள்ளனர் என்பது சம்பந்தமாக ஒரு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.
6. Elisa Puzzolo, B. Aamaas, L. Hyseni, M. Shupler, K. Aunan, D. Pope, Chris kypridemos என்பவர்களால் ஆய்வு செய்யப்பட்டு, International Health Perspective இல் 2020 இல் வெளியிடப்பட்ட, "Health and climate Impacts of scaling Adoption of Liquefied Petroleum Gas (LPG) for clean household cooking in Cameroon" எனும் ஆய்வில், எரிவாயுவை அனைவரும் பாவிக்கும் போது ஏற்படக்கூடிய சுகாதார மற்றும் காலநிலைத் தாக்கங்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

எனவே, நமது ஆய்வானது கண்டி கெலிஓயா பகுதியில் எரிவாயு தட்டுப்பாட்டினால் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆய்வு இடைவெளியாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.


**தரவுப் பகுப்பாய்வு**

அபிவிருத்தி அடைந்துவரும் இலங்கை போன்ற நாடுகளில் மக்கள் தற்போது முகம் கொடுக்கின்ற பாரிய சவால்களுள் ஒன்றாக எரிவாயுத் தட்டுப்பாடு காணப்படுகின்றது. இது தொடர்பாக லாப் கேஸ் நிறுவனத்தின் துணைத் தலைவர் யு. கே திலாக் டீ சில்வா

குறிப்பிடுகையில், “கடன் கடிதங்களை திறப்பதில் ஏற்பட்ட சிரமங்கள் மற்றும் வங்கிகளில் உள்ள அந்நியச் செலாவணியில் ஏற்பட்டுள்ள கடுமையான பற்றாக்குறை போன்ற இரண்டு முக்கியமான காரணங்களால் எரிவாயு இறக்குமதியை நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது” என்று குறிப்பிட்டுள்ளார் (இலங்கையில் எரிவாயு பற்றாக்குறை…, 2021).


இப்பற்றாக்குறை ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றி ஆராய்வதற்காக கெலிஓயா பிரதேச மக்களிடையே சமையல் எரிவாயு தட்டுப்பாடு தொடர்பான ஆய்வுக்கு 180 வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு, அவற்றுள் 167 வினாக்கொத்துக்கள் பூரணப்படுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன.

மனிதன் தன் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்காக பல்வேறு பொருட்களை, இயந்திரங்களை நாடிச் செல்கின்றான். அவ்வாறு மனிதனின் அன்றாட கடமையை நிவர்த்தி செய்யும் ஒன்றாக சமையல் எரிவாயு காணப்படுகின்றது. இதனால் பிரதேச மக்களிடையே இவ்வாய்வுக்காக எரிவாயு பயன்படுத்துபவர்களா? என்று வினவப்பட்ட போது அதில் ஆம் என்று 98% ஆனோர்கள் குறிப்பிட்டனர். இல்லை என 2% ஆனோர்கள் மாத்திரமே குறிப்பிட்டனர். இதனை வரைபு 1 சுட்டிக்காட்டுகின்றது.





வரைபு (1) எரிவாயு பயன்படுத்துபவர்கள்

அண்மைக் காலமாக நிலவி வரும் பொருளாதார நெருக்கடியால் கொள்வனவு செய்யக்கூடிய எரிபொருட்களின் விலை அதிகரித்தது. அதனடிப்படையில் எரிவாயு தட்டுப்பாட்டால் சமையல் எரிவாயுவின் விலையும் அதிகரித்தது. அந்தவகையில், 5kg சிலிண்டர்களுக்கு ரூ. 145.00 மற்றும் 12Kg சிலிண்டர்களுக்கு ரூ. 363.00 அதிகரிக்க நேர்ந்ததுடன், அதன்படி 5 Kg எடை கொண்ட சமையல் எரிவாயு ரூ. 743.00 மற்றும் 12.5Kg எடை கொண்ட சிலிண்டர் விலை ரூ. 1856.00 ஆகவும் அதிகரித்தது. மேலும், சில வாரங்களின் பின்னர் இதன் விலை அதிகரித்ததால் 12.5Kg எடையுள்ள சிலிண்டர் ரூ. 2750.00 ஆகவும், 5Kg எடையுள்ள சிலிண்டர் ரூ. 1101.00 ஆகவும், 2.5Kg எடையுள்ள சிலிண்டர் ரூ. 520.00 ஆகவும் அதிகபட்ச விலையை எட்டியது (Litro Gas Announces…,2021). இதனால் அதனைக் கொள்வனவு செய்வதில் சிரமப்படுகின்றீர்களா? என வினவப்பட்ட போது ஆம் என 75.4% ஆனோர்களும், ஓரளவு என 21% ஆனோர்களும், இல்லை என 3.6% ஆனோர்களும் குறிப்பிட்டனர். இதனை வரைபு 2 சுட்டிக்காட்டுகிறது.




வரைபு (2) சமையல் எரிவாயுவின் விலை அதிகரித்ததால் அதனைக் கொள்வனவு செய்வதில் சிரமப்பட்டவர்கள்

எரிவாயு தட்டுப்பாட்டால் அதன் விலை அதிகரித்ததைத் தொடர்ந்து எரிவாயுவின் கொள்ளளவும் குறைக்கப்பட்டது. வழக்கமாக Litro Gas Lanka 25 லீற்றர் அளவுடன் 12.5Kg எடையுள்ள சிலின்டர்கள் விற்பனை செய்யப்பட்டன. ஆனால், சமீபத்திய தயாரிப்பில் 12.5Kg எடையுள்ள சிலின்டரில் 18லீட்டர் அளவாக குறைக்கப்பட்டுள்ளது (Staff Writer, 2021). இவ்வாறு கொள்ளளவு குறைக்கப்பட்டதன் மூலம் அதன் பாவனைக் காலம் குறைந்ததால் சிரமப்படுகிறீர்களா? என்ற வினாவினை பிரதேச மக்களிடையே வினாக்கொத்தின் மூலம் வினவிய போது அதில் பெரும்பாலானோர் (85.6%) ஆம் என்று குறிப்பிட்டனர். ஓரளவு சிரமப்பட்டோராக 11.4% ஆனோர்களும், மிகவும் சொற்பமானவர்களே அதாவது 3% ஆனோர்களே இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளனர். இதனை பின்வரும் படம் 3 சுட்டிக்காட்டுகின்றது.





வரைபு (3) சமையல் எரிவாயுவின் கொள்ளளவு குறைக்கப்பட்டதன் மூலம் அதன் பாவனைக் காலம் குறைந்ததில் சிரமப்படுபவர்கள்.

தற்காலத்தில் நிலவிவரும் கொரோனா நோயினை கட்டுப்படுத்தும் முகமாக இலங்கையில் ஏற்றுமதி, இறக்குமதி சில கட்டுப்பாடுகளோடு இடம்பெற்று வருகின்றன. நாட்டில் பொருட்களுக்கான தட்டுப்பாடு நிலவுகின்றன. இதனால் சமையல் எரிவாயுவினதும்


தட்டுப்பாட்டால் சமையல் எரிவாயுவை பெற்றுக் கொள்வதில் சிரமப்படுகிறார்களா? என பிரதேச மக்களிடையே வினவப்பட்ட போது 84.4% ஆனோர்கள் ஆம் எனவு

ம், 13.2% ஆனோர்கள் ஓரளவு எனவும், 3.4% ஆனோர்கள் இல்லை எனவும் பதிலளித்தனர். இதனை வரைபு 4 காட்டுகிறது.




வரைபு (4) எரிவாயு தட்டுப்பாட்டால் எரிவாயு பெற்றுக் கொள்வதில் சிரமப்பட்டவர்கள்

அந்த வகையில், நாம் அன்றாட வாழ்வில் முகங்கொடுக்கக்கூடிய பொருளாதார, அரசியல் பிரச்சினைகளால் மக்களது வாழ்வு நேரடியாகவும், மறைமுகமாவும் பல்வேறு தாக்கங்களுக்கு உட்படுகின்றன. அந்த வகையில், இலங்கையில் சமையல் எரிவாயு தட்டுப்பாட்டினால் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர். பல வீடுகளில் சமையல் எரிவாயு தீர்ந்து சென்றபின் அதனைப் பெற்றுக்கொள்ள முடியாத போது, மக்கள் அன்றாடம் சமைக்கக்கூடிய பகலுணவு மற்றும் இரவுணவுகளை பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டீர்களா என ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களிடம் வினவப்பட்ட போது 73% ஆனவர்கள் ஆம் எனவும் இல்லையென 8% ஆனவர்களும் ஓரளவு என 19% ஆனவர்களும் குறிப்பிட்டனர். இதனை பின்வரும் படம் 5 காட்டுகிறது.




வரைபு (5) சமையல் எரிவாயு தீர்ந்த பின் உணவுகளை பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டோர்.

இவ்வாறான நிலைமையின் போது அன்றாட உணவிற்காக கடைகளிலும் உணவகங்களிலும் உணவினை பெற்றுக்கொண்டதாக மக்கள் குறிப்பிட்டனர். இதனால் மென்மேலும் பிரச்சினைகள் அதிகரித்தன எனவும் குறிப்பிட்டனர். வீட்டுணவில் பெறக்கூடிய தூய்மை, திருப்தி, பாதுகாப்பு, நம்பிக்கை நிறைந்த உணவைப் பெறுவதில் மக்கள் இடர்பாடுகளை சந்தித்துள்ளனர். மேலும், விலைக்கேற்ற உணவு கிடைக்கப்பெறாமை, போதியளவு இன்மை மற்றும் சுவையின்மை போன்ற பல்வேறு பிரச்சினைகளை மக்கள் எதிர்நோக்கியுள்ளதாகவம், உணவகங்களில் இருந்து உணவு கொள்வனவு செய்ததால் குழந்தைகளுக்கு தேவையான ஆரோக்கியமான உணவைப் பெறுவதில் சிக்கல்கள் ஏற்பட்டதோடு குழந்தைகள் அடிக்கடி நோய் வாய்ப்படவும் காரணமாகியுள்ளது. இவ்வாறு சமையல் எரிவாயு தட்டுப்பாட்டினால் வீட்டுணவு தயாரிப்பில் சிரமங்களை மேற்கொண்டதாக கலந்துரையாடலின் போது அறிந்துகொண்டோம்.

மேலும், எரிவாயு தட்டுப்பாட்டினால் எதிர்கொண்ட பிரச்சினைகள் என்ன என்று மக்களிடம் வினவிய போது, கூட்டுக்குடும்பத்தில் வாழ்வோர் எரிவாயு தட்டுப்பாட்டினால் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்ததாக தெரிவித்திருந்தனர். கூட்டுக்குடும்பம் எனும் போது, இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட குடும்பங்கள் இணைந்து வாழும் இடமாகும். எனவே, இங்கு குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகமாவே காணப்படும். எரிவாயுவின் கொள்ளளவு குறைக்கப்பட்டதாலும் தட்டுப்பாட்டாலும் இவர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். அதாவது, கூட்டுக்குடும்பம் எனும் போது அனைவரும் பணத்தை பிரித்தெடுத்து அவற்றின் மூலம் வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி பயன்படுத்துவதாகவும;, அப்பொருட்கள் தீர்ந்து போகும் பட்சத்தில் மீண்டும் அம்முறையைக் கையாண்டு பொருட்களை வாங்கிக் கொள்வர். எரிவாயுவின் கொள்ளளவு குறைக்கப்பட்டமையினால் அடிக்கடி எரிவாயுவை வாங்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. விலை கூடிய எரிவாயுவை அடிக்கடி கொள்வனவு செய்கின்றமையினால், அவர்களுக்கு அதிகமான பணம் எரிவாயுவிற்கே செலவாகிறது. இதனால் ஏனைய பொருட்களை சுதந்திரமாகவும், தேவையான அளவும் கொள்வனவு செய்ய முடியவில்லை என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்த எரிவாயுவின் தட்டுப்பாட்டின் காரணமாக கூட்டுக்குடும்பங்களில் குடும்பங்களுக்கிடையில் பிரச்சினைகள், கோபம், எரிச்சல் போன்றவைகளும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதே போல், தினக்கூலி வேலை செய்யும் குடும்பங்களிலும் எரிவாயு தட்டுப்பாட்டினால் சிரமங்களை எதிர்நோக்கியதாக கலந்துரையாடலின் போது குறிப்பிட்டனர். அதாவது, எரிவாயு தட்டுப்பாட்டால் விலை அதிகரித்ததால் எரிவாயு கொள்வனவு செய்ய சிரமப்பட்டு சிலபொழுது பட்டினியில் கிடந்ததாகவும், பிள்ளைகளுக்கு உரிய நேரத்தில் உணவு கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டதாகவும்கூறினர்.


அவ்வாறே, சிறிய குழந்தைகளைக் கொண்டிருக்கும் தாய்மார்களும் இந்த எரிவாயு தட்டுப்பாட்டினால் அதிகளவு சிரமப்பட்டுள்ளனர். சிறு குழந்தைகள் இருக்கின்ற இடங்களில் அவர்களுக்கென பிரத்தியேகமாகவும் ஆரோக்கியமாகவும் உணவு சமைக்க வேண்டும் என்பதால் அதில் பெரும் சிரமம் ஏற்பட்டதாகக் குறிப்பிட்டனர்.

தேவையான நேரத்தில் தேவையான அளவில் உணவை சமைத்துக்கொள்வதற்கு சமையல் எரிவாயுவைப் பயன்படுத்துவதே இலகுவான முறை எனத் தாய்மார்கள் தெரிவித்தனர். எனவே, எரிவாயுத் தட்டுப்பாடு ஏற்பட்ட இக்காலப்பகுதியில் குழந்தைகளுக்கான ஆரோக்கியமான உணவுகளைத் தயாரிக்க முடியாமலும் சரியான நேரத்திற்கு குழந்தைகளுக்கு உணவுகளை

வழங்க முடியாமலும் சிரமப்பட்டுள்ளனர் என்பதை இவ்வாய்விற்கான கலந்துரையாடலின் போது தாய்மார்கள் தெரிவித்தனர்.

சமையல் எரிவாயு தட்டுப்பாடு பற்றி கெலிஓயா பிரதேச மக்களிடையே கலந்துரையாடப்பட்ட போது, உணவகங்கள் மற்றும் வெதுப்பகங்களில் பணியாற்றக் கூடிய ஊழியர்கள் முன்வைத்த கருத்தானது சமையல் எரிவாயுவைப் பெற்றுக் கொள்ள முடியாததால் பல நாட்களாக பணிபுரிய முடியாமல் இடை நிறுத்தப்பட்டிருந்ததோடு, சமையல் எரிவாயுவின் விலை அதிகரித்ததால் உற்பத்திப் பொருட்களின் விலை அதிகரித்ததனால் பாரிய நட்டம் ஏற்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டனர்.

இருப்பினும், பொதுவாகப் பல்வேறு பிரச்சினைகள் மக்களிடையே எழுகின்ற போது அதற்கான தீர்வாக பல்வேறு மாற்று வழிகள் மக்களால் கண்டறியப்படுகின்றன. அந்த வகையில் சமையல் எரிவாயுத் தட்டுப்பாடுப் பிரச்சினை தொடர்பாக ஆய்வுப் பிரதேச மக்களிடையே கையாளப்பட்ட மாற்று வழிகளை பற்றி வினவிய போது பெரும்பாலானோர் (80%) விறகு பயன்படுத்தியதாகவும் 62% ஆனோர்கள் மண்ணெண்ணெய் அடுப்பு பயன்படுத்தியதாகவும் 0.7% ஆனோர்கள் மின் அடுப்பு பயன்படுத்தியதாகவும் குறிப்பிட்டுள்ளனர். அதாவது மாற்றுவழியினூடாக மின்னடுப்பு அல்லது மண்ணெண்ணை, விறகு இவற்றில் ஏதாவதொன்றை பயன்படுத்துபவர்களும் ஒரு சிலர் மாற்று வழியாக அவற்றில் ஏதாவது இரண்டையும் வேறுசிலர் மின் அடுப்பு, மண்ணெண்ணை, விறகு மூன்றையும் ஒரே வீட்டில் பயன்படுத்துபவர்களும் இருந்தனர். இதனை வரைபடம் 5 சுட்டிக்காட்டுகிறது.




வரைபு (5) எரிவாயு தட்டுப்பாட்டால் கையாண்ட மாற்று வழிகள்

எரிவாயுத் தட்டுப்பாடு காரணமாக பயன்படுத்தப்பட்ட மாற்று வழிகளினால் வேறு பிரச்சினைகள் ஏற்பட்டனவா எனக் கலந்துரையாடப்பட்ட போது சமையலை உரிய நேரத்தில் நிறைவேற்ற முடியாமை, புகை என்பவற்றால் இருமல் மற்றும் ஒவ்வாமை, மேலும் பழக்கம் இன்மையினால் அதிக நேரம் சமையலுக்குச் செலவதால், மின் அடுப்புப் பாவனையால் மின்கட்டணம் அதிகரித்தல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் மக்களால் முன்வைக்கப்பட்டன.

**முடிவுரையும் பரிந்துரைகளும்**

அண்மைக் காலமாக ஏற்பட்டுள்ள எரிவாயுவின் தட்டுப்பாட்டினால் கெலிஓயா பகுதி பொது மக்கள் பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்களா? என மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது கெலிஓயா பகுதியில் உள்ள அனேகமானோர் வீட்டு எரிபொருள் தேவைக்காக வேண்டி எரிவாயுவையே பயன்படுத்துகிறார்கள் என்பது கண்டறியப்பட்டுள்ளது. சமையல் எரிவாயுவின் விலை

அதிகரித்ததால் அதனைக் கொள்வனவு செய்வதில், சமையல் எரிவாயுவின் கொள்ளளவு குறைக்கப்பட்டதால் அதன் பாவனைக் காலம் குறைந்ததில் மக்கள் சிரமப்பட்டுள்ளனர் என்பதும் மக்கள் அன்றாடம் உணவுகள் சமைக்க முடியாது அவற்றினை கடைகளிலும் ஹோட்டல்களிலும் பெற்றுக்கொண்டதால் தூய்மை, திருப்தி, பாதுகாப்பு, நம்பிக்கை நிறைந்த உணவை பெறுவதில் மக்கள் இடர்பாடுகளை சந்தித்துள்ளனர் என்பதும் ஆரோக்கியமான உணவைப் பெறுவதில் சிக்கல்கள் ஏற்பட்டதால் குழந்தைகள் அடிக்கடி நோய் வாய்ப்பட்டுள்ளனர் என்பதும் இவ்வாய்வின் பிரதான கண்டறிதல்களாகும். மேலும், கூட்டுக்குடும்பத்தில் வாழ்வோர், தினக்கூலி செய்வோர், சிறிய குழந்தைகளைக்கொண்டிருக்கும் தாய்மார்கள், உணவகங்கள் மற்றும் வெதுப்பகங்களில் பணியாற்றக் கூடிய ஊழியர்கள் போன்றோர் இவற்றிலும் வேறுவிதமான பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்துள்ளனர். இருப்பினும், எரிவாயு தட்டுப்பாட்டால் சில மாற்று வழிகளைக் கையாண்டாலும் சமையலை உரிய நேரத்தில் நிறைவேற்ற முடியாமை, புகை என்பவற்றால் இருமல், மேலும், பழக்கம் இன்மையினால் அதிக நேரம் சமையலுக்கு செலவாதல், மின் அடுப்புப் பாவனையால் மின்கட்டணம் அதிகரித்தல் போன்ற பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்துள்ளனர் என்பதையும் இவ்வாய்வு ஊடாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையின் அனேகமான மக்கள் அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள எரிவாயுத் தட்டுப்பாட்டினால் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். எனவே, இப்பிரச்சினையை தீர்க்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதே போன்று இவ்வாறான அசாதாரண சூழ்நிலைகளை எதிர்கொள்ள மக்களும் தயாராக வேண்டும். எரிவாயுவின் பாவனையைக் குறைக்க மாற்று வழிகளை பின்பற்ற வேண்டும். இதன் மூலமாக எரிவாயுப் பாவனையை மட்டுப்படுத்திக் கொள்ள கூடியதாக இருக்கும். இவ்வாறான நடைமுறைகளை பயன்படுத்தி மக்கள் இந்த அசாதாரண சூழ்நிலையை எதிர்கொண்டாலும் இதற்கான நிரந்தரத் தீர்வை அரசாங்கம் கூடிய சீக்கிரத்தில் அமுல்படுத்த வேண்டும் என இவ்வாய்வு பரிந்துரை செய்கிறது.

**உசாத்துணைகள்**

Asmoah, D., Amoakohene. R., and Adiwokor, E. (2012). *Analysis of Liquefied Petroleum (LPG) Shortage in Ghana: A Case of the Ashanti Region. International Journal of Business Administration* Volume: 03

Bedioko, E. B., Dankwa, O. K. (2012). *Assessment of Liquefied Petroleum Gas (LPG) Utiliation in Ghana: A Study a tarkwa. International Journal of Scientific and technology Research* Volume: 2.

Chris kypridemos, Elisa Puzzolo, B., Aamas, K., Aunan, D., Pope, L., Hyseni, M., Shuplar. (2020). *Health and climate Impact of Scaling Adoption of Liquefied Petroleum Gas (LPG) for clean Householder cooking in Cameroon. International Health Perceptive.* 128(4): 1-12.

Litro Gas announces new GAS prices. (2021, October 10). *www.newswire.lk*. *https://www.newswire.lk/2021/10/10/lp-gas-announces-new-gas-prices/*

Logo Dharshini. (2021, August 10). சமையல் எரிவாயு குறித்து அமைச்சர் கூறுவதென்ன?. Virakesari. http://www.virakesari.lk

Manwell Dalaba. (2018). *Liquefied petroleum gas (LPG) supply and demand for cooking in northern Ghana. Eco Health.*

Sheed Lasisi. *(2021). An analysis of Liquefied Petroleum Gas adoption for Household Cooking in Nigera. Waldon dissertations and doctoral studies collection at scholar works.*

Smith, M. B., Umbaddo, S., Fadul, A. J. A., Bagadi, H. (2009). *Demand for wood full and Liquefied Petroleum Gas (LPG). United Nation Environment Programmed.*

*Sri Lanka: LPG consumption. (n.d). The global economy. https://www.theglobaleconomy.com/Sri-Lanka/lpg_consumption/*

Staff Writer. (2021, April 23). Litro yet to withdraw "misleading" gas cylinders. *www.newsfirst.lk*. *https://www.newsfirst.lk/2021/04/23/litro-yet-to-withdraw-misleading-gas-cylinders/*.

*Wijesakara, V. (2019). LPG and global market trends. https://wwwft.lk/opinion -and-issue LPG-pricing-formula-A-rebust-economic-solution-for-an-essantial-energy-sourse/14-688679*

*இலங்கை எரிபொருள் மற்றும் எரிவாயுவை உற்பத்தி செய்ய முடியுமா?.* (2021). Ibc Tamil. http://www.ibctamil.com

இலங்கையில் எரிவாயு பற்றாக்குறை *ஏற்படும் அபாயம்.* (2021, August 19). Tamil win. http://www.tamilwin.com